St. Joseph's Journal of Humanities and Science
ISSN: 2347-5331
http://sjctnc.edu.in/6107-2/



# பெண் - தாயாக

- பி. கிறிஸ்டி பெலினா *

## முன்னுரை

நவம்பர் பனிரெண்டாம் நாள் தினமலர் நாளிதழில் ஐஸ்வர்யா பச்சனின் பேட்டி வெளியானது. அதில் உலக அழகி - நடிகை - மனைவி - தாய் : இதில் எந்த ரோலை மிகச் சிறந்ததாக நினைக்கிறீர்கள்? என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு உலகப் புகழ்பெற்ற ஐஸ்வர்யா கூறிய பதில் "தாய் என்ற அந்தஸ்தைத்தான் மிக உயர்வாகக் கருதுகிறேன். கடவுள் எனக்குக் கொடுத்த ஆசீர்வாதமும் பரிசும்தான் ஆரத்யா (மகள்) என்று குறிப்பிட்டுள்ளார். இன்று திரைப்படப் பாடல்கள் தாயைப் பற்றியவை யாவும் மனதை நெகிழ வைக்கின்றன. ஆனால் ஒரு பெண் தாயாக இச்சமூகத்தில் பெரும் இடம் எத்தகையது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

## பிள்ளைப்பேறு

பெண்ணின் வாழ்வுக்கு சிறப்பளிப்பது "பிள்ளைப்பேறு" என்று கருதப்படுகிறது. இந்தப்பேற்றை அடைய எத்தனை துன்பம் வந்தாலும் பெண் சந்திக்கத் தயாராகின்றாள். திருமணம் ஆன உடனேயே அவள் கனவுகள் யாவும் பிள்ளைப்பேற்றை நினைத்து ஏங்குவதாகவே இருக்கிறது. இதற்காக கோயில்கள், நடைபயணங்கள், வேண்டுதல்கள், விரதங்கள் என எதையும் பெண் விட்டு வைப்பதில்லை. இப்படிப்பட்ட பெண் கருவுற்றதும் அக்கரு நன்கு வளர உணவு, உறக்கம் என அத்தனையும் ஒழுங்காகக் கடைப்பிடிக்கிறாள். குழந்தையின் உருவ அழகுக்காகப் பார்த்து, தேர்ந்து உணவு வகைகளை சாப்பிடுகிறாள். வயிற்றில் வளரும் கருவுக்காக சில பிடித்த உணவு வகைகளையும் கூட தள்ளி விடுகிறாள். குழந்தை தனக்குக் கிடைத்த வரமாக எண்ணி மகிழ்கிறாள். வயிற்றில் குழந்தை துள்ளும்போது அவள் மனமும் ஆனந்தத் துள்ளல் கொள்கிறது. குழந்தை உதைக்கும் போது அவள் மனதெல்லாம் மத்தாப்புகளாய் சிலிர்த்துக் கொள்கிறது.

## ஆண்குழந்தை - விருப்பம்

பெரும்பாலும் கருவுற்ற பெண்கள் முதலில் ஆண்குழந்தையையே விரும்புகின்றனர். ஆண்களே குடும்பத்தில் தலைமைப் பொறுப்பை வகிக்கின்றனர். ஆண்களே தங்கள் பெற்றோரைக் காக்கும் கடமை உள்ளவர்களாகக் கூறப்படுகின்றனர். ஆண்களே வாரிசாகக் கருதப்படுகின்றனர். சமுதாயத்தில் தலைமைப் பொறுப்புகளில் பெரும்பாலும் ஆண்களே உள்ளனர். எனவே இத்தகைய தாக்கம் பெண்ணின் மனதில் ஏற்படுவது இயற்கையாகிவிடுகிறது. பெண்ணும் தாய் என்ற முறையில் இச்சமுதாயத்தில் தனக்குக்

* உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.
கைப்பேசி: 9486528367, மின்னஞ்சல்: christybelinaf@gmail.com

கிடைக்காத கல்வி, அந்தஸ்து, பதவி, உரிமை ஆகிய அனைத்தும் தன் குழந்தைப் பெண்ணுக்கும் மறுக்கப்படும் என எண்ணி இத்துன்பத்தை அதுவும் பெற வேண்டாமே என்று காரணம் கூறுகிறாள். எனவே பெண்ணைத் தாயே மறுக்கிறாள்.

## ஆண் - பெண் - வளர்ப்பு

ஒரு தாய் தன் முதுமைப் பருவத்தில் அவளுக்கு உதவியாக இருந்து காப்பவன் ஆணே என்ற கருத்து காலந்தோறும் நிலவிவருவதும் ஆணை மட்டுமே விரும்புவதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. இத்தகைய கருத்தாக்கம் உள்ள பெண் தனது குழந்தை வளர்ப்பிலும் பாகுபாடு காட்டுகின்றாள்.

கண்களை விளக்காக்கி, கைகளைத் தொட்டிலாக்கி, மடியைப் பள்ளியாக்கி, செந்நீரை அமுதாக்கி, இரவைப் பகலாக்கி தன் குழந்தையை வளர்க்கும் தாய். தான் வளர்ந்தது போல் தானும் தன் பெண் குழந்தையை வளர்ப்பது மட்டுமே தன் குடும்பப் பெருமையைக் காக்கும் என்று கருதுகிறாள். இதனால் ஆண்குழந்தை எதைச் செய்தாலும் தட்டிக் கொடுத்து வளர்ப்பவள், பெண்ணுக்கு முட்டுக்கட்டை போடுவதையே குறிக்கோளாகக் கொள்கிறாள். வெளியே போகாதே! சத்தமாய்ப் பேசிச் சிரிக்காதே (வெளியே செல்லும்போது) பராக்குப் பார்த்துக் கொண்டே செல்லாதே. பிறர் இருக்கும் இடத்தில் பேசாதே........... இப்படியாக அவள் செய்யக் கூடாதவற்றைப் பட்டியல் இடுகிறாள். உணவு வகையிலும் பெண் குழந்தைக்கு அளவாக உணவளித்து மெல்லியவளாகவே காத்து வருவதில் கவனமாக இருக்கிறாள்.

## பெண்கல்வியும் திருமணமும்

கல்வியிலும் கூட ஒரு பெண் விரும்பி அதிகம் படித்துக் கொண்டே செல்வதில் மகிழ்ச்சி கொள்வதைவிட, தாயானவள் அதிகம் வருத்தம் கொள்கிறாள். “இவளை விட அதிகம் படித்தவனாக மாப்பிள்ளை பார்க்க வேண்டுமே! அதற்குத் தகுந்த வரதட்சணையும் நகையும் தரவேண்டுமே!” என்பதே அவளது கவலையாக இருக்கிறது. ஆணுக்கும் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் அடங்கி நடப்பதிலேயே குடும்பப் பெருமை அடங்கியிருப்பதாகப் பாடம் புகட்டுகின்றாள்.

ஒருமுறை என் தோழியின் இல்லத்திற்குச் சென்றிருந்தேன் அங்கு அவளது பெண் முதுகலைப் பட்டம் பெற்றவள். அவளுக்கு மணமுடிக்க பெற்றோர் வரன் தேடினர். ஒரு பொறியாளர் மாப்பிள்ளை. பெண்ணோ தங்கப்பதக்கம் பெற்றவள். மேலும் படிக்க விருப்பம் எனக்கு இப்போது திருமணம் வேண்டாம் என்பதில் பிடிவாதமாக இருக்கிறாள். இறுதியில் வெற்றியும் பெற்றாள். காத்திருக்க மனமில்லாத மாப்பிள்ளையின் பெற்றோர் வேறுபெண்ணைத் தேடி மணமுடித்துவிட்டனர். இந்தப் பெண்ணின் பெற்றோருக்கோ தீராத வருத்தம். நல்ல மாப்பிள்ளையை விட்டுவிட்டோமே! இனி எப்போது இவளை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டு அப்பாடா! என்று இருக்கப் போகிறோம் என்று பலவாறாக வருத்தங்கள்.......... குறைந்த பாடில்லை. எனவே ஒரு தாய் தன் பெண் குழந்தையை அடுத்த வீட்டுக்குச் செல்ல ஏற்றவளாகத் திட்டமிட்டு வளர்ப்பதையே கொள்கையாகக் கொள்கிறாள்.

ஒருமுறை எனது மாணவி ஏழாம் வகுப்பு முடிக்கும் தருணத்தில் என்னிடம் வந்து அவள் பெற்றோரைப் பார்த்துப் பேசும்படி கூறினாள். தாயின் தம்பிக்கு (மாமன்) இவளைத் திருமணம் செய்விக்க ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. தாய் தந்தை இருவரையும் சந்தித்துப் பேசினேன். உடல் உள்ள ரீதியாக அவள் பக்குவப்படாத வயதில் திருமணம் செய்வித்தால் அவள் வாழ்க்கை எப்படியிருக்கும் என்று விளக்கினேன். திருமணம் தள்ளிப்போடப்பட்டது. சந்தோஷமாக மூன்று மாதங்கள் தொடர்ந்து வந்தாள். திடீரென பள்ளிக்கு வராமல் நின்றுவிட்டாள். அவளைக் காண முயற்சி செய்தேன் முடியவில்லை ஒருநாள் என் மாணவிகள் வந்து இன்று நாகரத்தினத்திற்கு திருமணம் என்றார்கள். திருமணத்திற்கு அழைக்காமலேயே சென்றேன். பெற்றோருக்கும் என் மாணவிக்கும் ஒருவகையில் மகிழ்ச்சி ஆனால் நான் பால்முகம் மாறாத நாகரத்தினத்தைப் பார்த்து வேதனையோடு திரும்பினேன். இச்சம்பவம் நடந்து பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன என்றாலும் நாகரத்தினத்தின் பதின்மூன்று வயதுப் பால்முகம் என் மனதை விட்டு மறைய மறுக்கிறது.

## தாய் - உருவாக்கம்

இன்று பெண் ஒரு தாயாக தனது கடமையை ஆற்றுவதற்கு ஆணாதிக்கச் சமூகம் அவளைத் தயார் செய்துள்ளது. அடங்கிப் போகும் பெண், அடுப்பூதும் பெண், விட்டுக்கொடுக்கும் பெண், அமைதியான பெண், எதிர்த்து வாதிடாத பெண் இவர்களே குடும்பத்திற்கு ஏற்ற பெண்கள் என்று சொல்லிச்சொல்லி உருவாக்கப் பட்டிருக்கிறாள். வெளியே கடைக்குச் செல்லவும், பக்கத்து வீட்டுக்குச் சென்று வரவும் பையனைப் பழக்கும் தாய் வீட்டைப் பெருக்கவும், துணிதுவைத்து, சமைக்கவும் என வீட்டுக்குள்ளே அடங்கிப் போகும் வேலைகளைச் செய்ய பெண்ணைப் பழக்கவும் தவறுவதில்லை. இப்படிப் பெண்ணை வளர்க்காத அன்னையர் இன்று ஏளனத்திற்கும் பிறர் காயப்படுத்தலுக்கும் உரியவள் ஆகிறாள்.

## பழமொழிகள்

"தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை : தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால் பெண்ணை வீட்டிலா பார்க்க வேண்டும்?" போன்ற பழமொழிகள் மற்றும் புராணக் கதைகள் இவைகளைக் கூறி பெண் ஒரு தாயாக எதைச் செய்ய வேண்டும் என்பதை சமூகம் திட்டமிட்டு வரையறுத்துக் கொடுத்துவிட்டது. இவையாவையும் உள்வாங்கிய தாயின் மனம் இவற்றை மீற மனம் விரும்பினாலும் செய்யக் கூடாத தவற்றை செய்துவிட்டதாக மனம் வெதும்பிப் போகிறாள்.

## முடிவுரை

இன்று படித்த பெண்கள் கூட இந்த வட்டத்தை விட்டு வெளியே வர மறுக்கிறார்கள். இளமைக் காலங்களில் சுதந்திரமாகப் பறக்க விரும்பிய பெண்களே கூட தாயாகியதும் தங்களது பெண்களை சுதந்திரமாக விடுவதில்லை மாறாக அவர்களைப் பொறுப்பானவர்களாகவும் கட்டுக்கோப்பானவர்களாகவும் வளர்க்கும் பொறுப்பைத் தலைமேல் சுமத்தப்பட்ட சுமையாக எண்ணுகின்றனர். பெண்களுக்குரிய பண்புகளைப் போற்றி வளர்ப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். எனவே இன்று பெண்களே தங்கள் குழந்தைகளுக்கு ஆண் - பெண் சம உரிமை கொடுப்பதுபோல் தோன்றும் தோற்றம் வெறும் மாயத் தோற்றமே! பெண்கள் சமூக அமைப்பில் ஆண்களுக்கு இணையாக வளர்வதற்கு கற்றுத்தரப்படுவதில்லை. எதிர் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு நிலை உருவாக வேண்டும். அதுவே சமுதாயத்திற்கு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையைத் தரும் என்பது உறுதி.